09

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 67/14 — 1979 දෙසැම්බර් 21 වැනි සිකුරාදා — 1979.12.21

67/14 ம் இலக்கம்—1979 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பீ. 21/78.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

டபிள்யூ. எம். ஏ. விஜேரட்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1979ம் ஆண்டு திசெம்பர் மீ 21ந் உ.

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணூட்டு மருத்துவக் கல்விக் கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. நீக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 (ப) என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட, கீழ்க்காணும் கட்டளைகளும், மேற்கூறிய சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 140 ஆம் பிரிவின் கீழ் அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளைச்சட்டமெனக் கருதப்படுவதுமான கீழ்க்காணும் நியதிச்சட்டமும், அத்தகைய கட்டளைகள், நியதிச்சட்டம் என்பவற்றின் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றன.

(அ) 1976 ஒற்றோபர் 13 ஆம் தேதியதும், 234/9 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளை ;

(ஆ) 1976 நவம்பர் 29 ஆம் தேதியதும், 241/2 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளை ;

(இ) 1977 மார்ச் 30 ஆம் தேதியதும், 258/9 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளை ; அத்துடன்

(ஈ) 1977 மார்ச்சு 30 ஆம் தேதியதும், 258/9 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஆயுள்வேத நிறுவக நியதிச்சட்டம்.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், உண்ணூட்டு மருத்துவக் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. நிறுவகமானது இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும் ; இப்பல்கலைக் கழகம் இதனகத்துப் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.



2—A 47094